Register No. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

**FTA**

**3896–18**

THE CENTRAL LAW COLLEGE, SALEM 636 008.

(For the candidates admitted from 2009-2010 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATIONS, MAY 2018.

(Five Years Regular Course)

Fifth Year — Ninth Semester

CRIMINAL PROCEDURE CODE

Time : Three hours | Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்

1. Explain the various types of Criminal Courts and their powers under the Criminal Procedure Code. 1973.

   குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973 ன் கீழ் காணப்படும் பல்வேறு வகையான குற்றவியல் நீதிமன்றங்களையும் அவற்றின் அதிகாரங்களையும் விளக்குக.

2. Evaluate the role of the Defence Counsel in Criminal trials.

குற்ற வழக்குகள் குறித்த நீதிமன்ற விசாரணையில் எதிர் தரப்பு வழக்கறிஞரின் பங்கு குறித்து மதிப்பீடு செய்க.

3. "The right to speedy trial is an integral part of the Right to liberty guaranteed under Article 21 of the Constitution of India — Comment.

விரைவான விசாரணை வேண்டும் எனக் கோரும் உரிமை இந்திய அரசமைப்புச் சட்ட பெரும்பிரிவு 21ல் உறுதிப்படுத்தியுள்ள சுதந்திரமாக வாழுரிமையின் ஒரு பகுதியாகும் — விளக்குக.

4. Write an essay on release of offenders on probation in India.

இந்தியாவில் நன்னடத்தைக் கண்காணிப்பில் குற்றவாளிகளை விடுதலை செய்வது குறித்து கட்டுரை எழுதுக.

5. Discuss the law relating to "Juvenile delinquency".

இளஞ்சிறார் குற்றத்தன்மை குறித்த சட்டம் பற்றி விவாதிக்கவும்.



## PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக :

(a) Summons Case.

அழைப்பாணை வழக்கு.

(b) Private Complaint.

தனியார் குற்ற முறையீடு.

(c) Joinder of Charges.

குற்றச்சாட்டுரைகளின் இணைப்பு.

CENTRAL LAW ... LIBRARY ... SALEM-636 008.

(d) Anticipatory Bail.

எதிர்பார்ப்பு பிணை.

(e) Trial of an Unsound mind Person.

பித்து நிலையர் மீதான வழக்கு விசாரணை.

(f) Arrest.

கைது.

(g) Transfer of a Criminal Case.

குற்றவழக்கினை மாற்றுதல்.

(h) Criminal Appeal.

குற்ற வழக்கு மேல்முறையீடு.

(i) Death Penalty.

மரண தண்டனை.

(j) Judicial Custody.

நீதிமன்ற காவல் வைப்பு.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to relevant provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' is tried upon a charge of theft as a servant and acquitted. While the acquittal remains in force, he is charged with breach of trust. Decide the legality.

'அ' என்ற பணியாளர் திருட்டு குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு, பின் விடுதலை செய்யப்படுகிறார். விடுதலை நிலுவையில் இருக்கும் போது அவர் மீது குற்றமுறு நம்பிக்கை மோசடி வழக்கு வனையப்படுகிறது. அதன் சட்டத்தன்மையை தீர்வு செய்க.



8. 'A' is tried for the offence of adultery with 'C' the wife of B. 'A' and 'C' want to compound the offence. Discuss.

'அ' என்பவர் 'ஆ' வின் மனைவி 'இ' யுடன் பிறன்மனைப் புணர்ச்சி குற்றத்திற்காக விசாரிக்கப்படுகிறார். 'அ' வும் 'இ' யும் குற்றத்தினை சமரசம் செய்து கொள்ள விரும்புகின்றனர் — விவாதிக்க.

9. 'A' a witness called before the criminal court refuses to answer questions which are put to him. He does not offer any reasonable excuse for such refusal. Can the court sentence him for such refusal?

'A' என்கிற ஓர் சாட்சி ஒரு குற்றவியல் நீதிமன்றம் முன் அழைக்கப்படுகிறார். அவர் தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்க மறுத்து விடுகிறார். மறுப்பிற்கு நியாயமான எந்த விளக்கமும் அவர் அளிக்கவில்லை. நீதிமன்றம் அவரை தண்டிக்க இயலுமா?

10. 'A' pleads guilty in a case, before the Court of sessions. He is willing to prepare an appeal against the conviction. Advise him.

'அ' என்பவர் அமர்வு நீதிமன்றத்தின் முன் குற்றத்தை ஏற்று வழக்கை முடிக்கிறார். அவர் அத்தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்ய விரும்புகிறார். அறிவுரை கூறுக.

11. A FIR is registered in a delayed manner. In a trial before the court, decide the legality of FIR.

முதல் தகவல் அறிக்கை காலதாமதமாகப் பதிவு செய்யப்படுகின்றது. நீதிமன்ற விசாரணையின் போது முதல் தகவல் அறிக்கையின் சட்ட தன்மையை தீர்மானிக்க.

12. 'A' after committing murder at Thirunelveli, absconded and afterwards he was arrested near Mumbai. Discuss the place of Trial.

'அ' என்பவர் திருநெல்வேலியில் ஒரு கொலை செய்து விட்டு தலைமறைவாகிறார். பின்னர் மும்பை அருகே கைது செய்யப்படுகிறார். அவர் விசாரணை செய்யப்பட வேண்டிய இடத்தை ஆராய்க.

THE CENTRAL LAW COLLEGE, LIBRARY ★ SALEM-636 008. ★

THE CENTRAL LAW COLLEGE, LIBRARY, SALEM-636 008.

Register No. [ | | | | | | | | ]

**FTA** **3661–17**

(For the candidates admitted from 2009–10 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATIONS,
NOVEMBER 2017.

(Five Years Regular Course)

Fifth Year – Ninth Semester

CRIMINAL PROCEDURE CODE

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain the powers and functions of the various criminal courts constituted under the Code of Criminal Procedure, 1973.

   குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ன் படி அமைக்கப் பெற்ற பல்வேறு குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகாரங்களையும், செயல்பாடுகளையும் விளக்குக.

2. Explain the main segments of the pre-trial procedure under the Code of Criminal Procedure, 1973.

குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 ன் கீழ் முன் விசாரணைச் செயல்முறைப் பற்றிய முக்கிய பிரிவுகளை விளக்குக.

3. "All confessions are statements, but all statements are not confessions". – Explain.

"அனைத்து குற்ற ஏற்புரையும் வாக்குமூலமே, ஆனால் அனைத்து வாக்குமூலமும் குற்ற ஏற்புரை அல்ல" – விளக்குக.

4. Explain the law relating to an appeal.

ஒரு மேல் முறையீட்டிற்கான சட்டத்தினை விளக்கவும்.

5. Explain the powers and functions of the Juvenile Justice Board.

இளஞ்சிறார் நீதிக் குழுமத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விளக்கவும்.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Assistant Public Prosecutor

உதவிப் பொது வழக்கீட்டாளர்

(b) Case diary

வழக்கு நாட்குறிப்பேடு



(c) Jail appeal

சிறைவழி மேல்முறையீடு

(d) Double jeopardy

ஈரிடர்

(e) Execution

தண்டனை நிறைவேற்றல்

(f) Appeal against acquittal

விடுதலைக்கு எதிரான மேல்முறையீடு

(g) Remission

தண்டனைக் குறைப்பு

(h) Summary trial

குறுகு முறை விசாரணை

(i) Inquest

இறப்பாய்வு

(j) Joinder of charges

குற்றச் சார்த்துக்களின் சேர்க்கை

THE ... LAW COLLEGE, LIBRARY, SALEM-636 008.

## PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A First Class Judicial Magistrate conducting a summary trial imposes 6 months imprisonment. Discuss.

ஒரு முதல் வகுப்பு குற்றவியல் நடுவர் குறுகு முறை விசாரணை நடத்தி 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கிறார். விவாதிக்க.

8. A police officer starts his investigation of a non-cognizable offence without obtaining permission of a Magistrate. Estimate the validity of the act of the police officer.

ஒரு காவல் அலுவலர் நீதித்துறை நடுவரின் அனுமதியின்றி ஒரு புலன்கொள்ளாக் குற்றத்திற்காக விசாரணையில் ஈடுபடுகிறார். காவல் அலுவலரின் செயலானது செல்லத்தக்கதா என்பதை மதிப்பீடு செய்க.



9. 'A' has committed an offence of theft in Tirunelveli. He has been arrested at Chennai. Decide the place of trial.

'அ' என்பவர் ஒரு திருட்டுக் குற்றத்தினை திருநெல்வேலியில் செய்தார். அவர் சென்னையில் கைது செய்யப்பட்டார். எவ்விடத்தில் வழக்கு விசாரணையை மேற்கொள்ள இயலும்? முடிவு செய்க.

10. An investigation has been made by a local police station. On the reason of dissatisfaction, they approach an agency to investigate further. Is it valid?

ஒரு புலன் விசாரணை உள்ளூர் காவல் நிலைய அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது. அது திருப்தி இல்லாத காரணத்தால், மேற்கொண்டு ஒரு முகமையின் வாயிலாக விசாரணை மேற்கொள்ள அணுகினார்கள். இது செல்லத்தக்கதா?

11. An Assistant sessions judge has convicted a person for an offence and sentenced him to 2 years rigorous imprisonment. The convicted person wants to file an appeal. Decide.

ஒரு உதவி அமர்வு நடுவர், ஒரு குற்றத்திற்காக குற்றவாளியைத் தண்டித்து இரண்டு வருடங்கள் கடுங் காவல் தண்டனையும் அளிக்கப்பட்டது. தண்டிக்கப்பட்ட நபர் மேல் முறையீடு செய்ய விரும்பினார். தீர்மானிக்கவும்.

12. A is charged with the offence of murder under Section 326 of IPC. Decide whether A could lawfully compound the offence.

'அ' என்பவர் பிரிவு 326 இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் கொலைக் குற்றத்தைச் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டார். அவர் இக்குற்றத்தினைச் சட்டப்படி சமரசம் செய்து கொள்ள இயலுமா என்பதனைத் தீர்மானிக்கவும்.

---

THE CENTRAL LAW COLLEGE, SALEM-636 ...
LIBRARY

THE CENTRAL LAW COLLEGE, SALEM-636 008. LIBRARY

Register No.

**FTA** **3272–16**

(For the candidates admitted from 2009–2010 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATIONS,
NOVEMBER 2016.

(Five Years Regular Course)

Fifth Year – Ninth Semester

CRIMINAL PROCEDURE CODE

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. What are the important changes made by the present Criminal Procedure Code – 1973 to speed up disposal of criminal cases?

குற்ற வழக்குகளுக்கு விரைவாக தீர்வு காண 1973–ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டத்தால் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் யாவை?

2. Define the warrant of arrest. State the circumstances in which a police officer can arrest without warrant, under Criminal Procedure Code – 1973.

பிடியாணை என்பதனை விவரி. காவல் அலுவலர் ஒருவர் பிடியாணையின்றி கைது செய்வதற்கு குற்றவியல் நடைமுறை சட்டம் 1973 - ல் கூறும் சூழ்நிலைகளை குறிப்பிடுக.

3. "Wife unable to maintain herself is entitled to get maintenance from her husband" – Comment.

''தன்னை பராமரித்து கொள்ள இயலாத மனைவிக்கு கணவரிடம் இருந்து வாழ்க்கைப் பொருளுதவி பெற உரிமையுண்டு'' – கருத்துரை தருக.

4. Explain the procedure relating to trial before court of sessions.

அமர்வு நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணை முறையை விளக்குக.

5. Explain the orders that may be passed regarding juvenile in conflict with law.

சட்டத்தோடு முரண்படும் இளவர் தொடர்பாக பிறப்பிக்கப்படும் ஆணைகளை விளக்கவும்.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக :

(a) Admonition.

எச்சரித்து விடுதலை அளித்தல்.

(b) Borstal school.

போஸ்டல் பள்ளி.

(c) Complaint.

முறையீடு.

(d) Discharge and acquittal.

குற்ற விடுவிப்பு மற்றும் விடுதலை.

(e) Execution of death sentence.

மரண தண்டனையை நிறைவேற்றுதல்.

(f) D.K. Basu vs. State of West Bengal.

டி.கே. பாசு எதிர் மேற்கு வங்க மாநிலம்.

(g) John Augustus.

ஜான் அகஸ்டஸ்.

(h) Plea of guilty.

குற்ற ஒப்புதல்.

THE CENTRAL LAW COLLEGE, LIBRARY, SALEM-636 008.

(i) Inherent powers of High Court.

உயர் நீதிமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரம்

(j) Revision

சீர் ஆய்வு.

## PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும், இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' made an oral allegation before a magistrate with a view to take action against some unknown persons who have committed a cognizable offence. Whether this can be acted upon?

ஒரு குற்றவியல் நீதித் துறை நடுவரிடம் A – என்பவர் சில அடையாளம் தெரியாத நபர்கள் பிடியாணையின்றி கைது செய்யக் கூடிய குற்றத்தை செய்ததாக வாய்மொழியாக கூறுகிறார். இதனை ஏற்று நடவடிக்கை எடுக்க இயலுமா?

8. In a particular case because of the non availability of Assistant Public Prosecutor, the District Magistrate appointed a police officer as Assistant Public Prosecutor; who also took part in the investigation of the case. Is the appointment and the subsequent trial are valid one? Explain.



குறிப்பிட்ட ஓர் வழக்கில் உதவி பொது வழக்கீட்டாளர் இல்லை என்ற காரணத்தால் மாவட்ட நிர்வாக துறை நடுவர் ஒரு காவல் துறை அலுவலரை உதவி பொது வழக்கீட்டாளராக நியமனம் செய்கிறார். அவர் அந்த வழக்கின் புலன் விசாரணையிலும் பங்கு எடுத்து கொண்ட காவல் அலுவலர் ஆவார். இந்த நியமனமும் அதனை தொடர்ந்து நடைபெறும் குற்ற வழக்கின் விசாரணையும் சட்டபடி செல்லத்தக்கதா? விளக்கவும்.

9. The Supreme Court quashed the appointment of a Sessions judge. But before the said decision, it was argued before the court that he had disposed of a number of criminal cases and all the decisions given by the said Judge were null and void. Is it a valid contention?

அமர்வு நீதிமன்ற நீதிபதி ஒருவரின் நியமனத்தை இந்திய உச்ச நீதிமன்றம் செல்லாதது என சாற்றுகிறது. இந்த ஆணை சாற்றுவதற்கு முன்னால் அவரால் முடிவு செய்யப்பட்ட குற்றவழக்குகள் அனைத்தும் செல்லத்தக்கவை அல்ல என வாதிடப்படுகிறது. இந்த வாதம் ஏற்று கொள்ள தக்கதா?

10. Service of summon on a government servant was effected by sending it to the head of the office. The superior officer to the government servant refused to receive the summon. What is the offence committed by the superior government officer?

ஓர் அரசு ஊழியருக்கு அழைப்பாணை வழங்க வேண்டி அதனை அவர் பணியில் இருக்கும் அலுவலக உயர் அதிகாரிக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. அதனை பெற்றுக்கொள்ள அந்த அரசு உயர் அலுவலர் மறுத்துவிடுகிறார். அவர் புரிந்த குற்றம் என்ன?

11. A judicial magistrate not empowered by law erroneously recalls a case and tries it himself. Whether this irregularity will affect the validity of subsequent proceedings.

ஓர் குற்றவியல் நீதித்துறை நடுவர் தவறுதலாக தனக்கு ஆள்வரையற்ற ஓர் வழக்கை திரும்ப அழைத்து, தானே விசாரணை செய்து முடிவு செய்கிறார். இந்த சட்ட முரண்பாடு இதனைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வுகளின் செல்லுபடியாகக் கூடிய தன்மையைப் பாதிக்குமா என ஆராய்க.

12. An accused person files a transfer application on the ground that the magistrate insisted on the compromise of the case by the parties. Whether his transfer application is sustainable in law.

ஒரு குற்றம் சாட்டப்பட்ட நபர், நீதித் துறை நடுவர் புகார் கொடுத்தவர் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் ஆகிய இருவரையும் சமரசம் செய்து கொள்ள வற்புறுத்துகிறார் என்ற காரணத்தைக் கூறி தனது வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யக் கோருகிறார். அவரின் மனு சட்டரீதியாக நிலைநிறுத்தத் தக்கதா எனக் கூறுக.

---

THE CENTRAL LAW COLLEGE
LIBRARY
SALEM-636 008.

THE CENTRAL LAW COLLEGE LIBRARY SALEM

Register No.

FTA

3144–16

(For the candidates admitted from 2009–10 onwards)

B.A. B.L. DEGREE EXAMINATIONS, MAY 2016.

(Five Years Regular Course)

Fifth Year — Ninth Semester

CRIMINAL PROCEDURE CODE

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Is our Criminal Procedure Code 1973 is simple, expeditious and inexpensive in achieving its goal?

நம்முடைய குற்றவியல் நடைமுறை சட்டம் 1973 அதனுடைய வெற்றியை அடைய எளிமையாக, விரைவானதாக மற்றும் செலவற்றதாக உருவாக்கப்பட்டுள்ளதா?

2. Define and differentiate between Inquest, Inquiry Investigation and Trial.

இறப்பு விசாரணை, விசாரணை, புலன் விசாரணை மற்றும் குற்ற விசாரணை என்பனவற்றை வரையறுத்து, வித்தியாசப்படுத்தவும்.

3. "In every arrest there is custody, but vice versa is not true" – Explain.

"ஒவ்வொரு கைதும் பாதுகாப்பில் வைத்திருத்தலை உள்ளடக்கியது ஆகும், ஆனால் எல்லா பாதுகாப்பில் வைத்திருத்தலும் கைது நடவடிக்கை ஆகாது" – விளக்குக.

4. Who are the persons from whom bond for good behaviour can be taken?

நன்னடத்தைக்கான ஆவணப்பத்திரம் எவர் எவரிடம் இருந்து பெறப்படலாம்?

5. Describe the important characteristics of juvenile courts.

இளஞ்சிறார் நீதிமன்றங்களின் முக்கிய பண்புகளை விளக்குக.

PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Anticipatory Bail.

எதிர்நோக்கு பிணை

(b) Borstal school.

சீர்திருத்தப் பள்ளி



(c) Complaint to a magistrate

நீதிமன்ற நடுவரிடம் முறையீடு

(d) Discharge

குற்ற விடுவிப்பு

(e) Error in charge

பிழையான குற்றச்சாட்டு

(f) First Information Report

முதல் தகவல் அறிக்கை

THE CENTRAL LAW COLLEGE, LIBRARY ...M-636 008.

(g) General provisions as to enquiries and trial

விசாரணை மற்றும் குற்ற விசாரணை குறித்த பொது வழிவகை

(h) Victim compensation

குற்ற பாதிப்பாளருக்கான நிவாரணம்

(i) Irregular proceedings

தவறான நடைமுறைகள்

(j) Juvenile offenders.

சட்டமுரண்பாடுடைய இளவர்.

## PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' committed murder in Thanjavur and he was arrested in Madurai. Immediately he was taken to judicial magistrate at Madurai, where he voluntarily made confession about the crime. Whether the confession is valid.

'அ' என்பவர் தஞ்சாவூரில் கொலை செய்ததற்காக மதுரையில் கைது செய்யப்படுகிறார். உடனடியாக அவர் மதுரை நீதித்துறை நடுவர் முன் ஆஜர்படுத்தப்பட்டு அங்கு அவர் தானாக முன் வந்து நீதித்துறை நடுவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறார். அந்த ஒப்புதல் வாக்கு மூலம் செல்லுபடியாகுமா?

8. 'A', a witness, being summoned to appear before criminal court, neglected to attend without just excuse. Can the court try such witness summarily and punish him?

'அ' என்ற சாட்சி ஓர் குற்றவியல் நீதித்துறை நடுவர் முன் ஆஜராகும்படி கேட்கப்படுகிறார். அவர் சரியான காரணம் இன்றி ஆஜர் ஆகாமல் அலட்சியப்படுத்தி விடுகிறார். நீதிமன்றமானது அவன்ர சுருக்கு முறையில் விசாரித்து தண்டனை அளிக்க இயலுமா?



9. Whether a married daughter is liable to pay maintenance to her aged parents even after her marriage under Section 125 of the Criminal Procedure Code 1973.

குற்றவியல் நடைமுறைசட்டம் 1973 பிரிவு 125 ன் கீழ் ஓர் திருமணம் ஆன மகள் தனது வயதான பெற்றோர்களுக்கு வாழ்க்கை பொருள் உதவி அளிக்க கடமைப்பட்டவரா?

10. Whether a sessions judge is empowered to order that any particular case be transferred from one criminal court to another criminal court in his session division.

ஓர் அமர்வு நீதிமன்றத்தின் நீதிபதி தனது அதிகார வரம்பிற்கு உட்பட்ட ஒரு குற்றவியல் நீதி மன்றத்தின் குறிப்பிட்ட ஓர் வழக்கினை வேறு ஒரு குற்றவியல் நீதி மன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவு பிறப்பிக்க இயலுமா?

11. 'A' is charged before the court of session and convicted for the culpable homicide of 'B'. Whether 'A' may be subsequently tried on the same facts for the murder of 'B'?

'A' என்பவர் 'B' என்பவரை கொலையாகாத மரணம் விளைவித்த குற்றம் செய்ததாக மாவட்ட அமர்வு நீதிமன்றம் தண்டித்தது. அதே நிகழ்மைகளுக்காக 'A' என்பவரை மறுபடியும் கொலை குற்றத்திற்காக வழக்கு விசாரணை செய்ய முடியுமா?

12. 'A' entices 'B', the wife of 'C', away from 'C' with the intent to commit adultery with 'B', and then commits adultery with her. Whether 'A' may be charged for two separate offences under the Indian Penal Code?

'A' என்ற நபர் 'C' யின் மனைவியாகிய 'B' யுடன் பிறன்மனை புணர்தல் நோக்கத்துடன் கடத்தி செல்கிறார். பின்னர் B–யுடன் புணர்தல் கொள்ளவும் செய்கிறார். இந்திய தண்டனை சட்டத்தின் இரு வேறு பிரிவுகளின் கீழ் 'A' – வை தனித்தனியாக குற்றம் சாட்டப்பட்டு தண்டனை வழங்க இயலுமா?

---

THE CENTRAL LAW COLLEGE LIBRARY SALEM

Register No. [ ]

THE CENTRAL LAW COLLEGE LIBRARY SALEM-636 008.

FTA

2939–15

(For Candidates admitted from 2009-2010 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATIONS,
NOVEMBER 2015.

(Five Years Regular Course)

Fifth Year — Ninth Semester

CRIMINAL PROCEDURE CODE

Time : Three hours Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following, not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்.

1. What was the principal object of Criminal Procedure Code 1973? Discuss the recent amendments on Criminal Procedure Code 1973.

குற்றவியல் நடைமுறை சட்டம் 1973-ன் முக்கிய நோக்கம் யாது? குற்றவியல் நடைமுறை சட்டம் 1973-ன் மீது சமீபகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் யாவை?

2. Define and differentiate between bailable offence, cognizable offence and compoundable offence.

பிணையத்தில் விடக்கூடிய குற்றம், பிடியாணை வேண்டாக் குற்றம் மற்றும் சமரச தீர்விற்குரிய குற்றம் இவற்றை விளக்கி வேறுபடுத்தி காண்பிக்கவும்.

3. What are the occasions in which a Police Officer can arrest without an order from a magistrate?

எந்தெந்த சமயங்களில் ஓர் காவல்துறை அதிகாரி நீதித்துறை நடுவரின் ஆணையின்றி கைது செய்யலாம்?

4. What are the powers and duties of the Appellate Court in deciding the appeal?

ஓர் மேல் முறையீட்டை முடிவு செய்வதில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரமும், கடமையும் யாவை?

5. Explain the circumstances under which a convicted person may be released on probation.

குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவரை நன்னடத்தை கண்காணிப்பில் விடுவிக்கும் சூழ்நிலைகளை விவரிக்கவும்.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following, not exceeding two pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Age of Juvenility.

இளம் சிறார் வயது.

(b) Bond for good behaviour.

நன்னடத்தைக்கான பத்திரம்.

(c) Constitution of Criminal Courts.

குற்றவியல் நீதிமன்றங்களின் அமைப்புமுறை.

(d) Duties of Probation Officer.

நன்னடத்தை அதிகாரியின் கடமைகள்.

(e) Executive Magistrate.

நிர்வாகத்துறை நடுவர்.

(f) First Offender to be released on admonition.

முதல் முறை தவறு செய்யும் நபரை எச்சரித்து விடுவித்தல்.

THE CENTRAL LAW COLLEGE LIBRARY SALEM-636 008

(g) Government Power to remit sentence.

தண்டனை குறைப்பதற்கான அரசின் அதிகாரம்.

(h) Habitual offenders.

குற்றம் செய்வதை வழக்கமாக கொண்டு இருப்பவர்.

(i) Inherent powers of High Court.

உயர்நீதிமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரம்.

(j) Judicial Magistrate Courts.

நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள்.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. "A" after committing murder at Cuddalore absconded and afterwards he was arrested at Pondicherry. Discuss the place of trial.

"A" என்பவர் கடலூரில் ஒரு கொலை செய்து விட்டு தலைமறைவு ஆகிறார். பின்னர் அவர் பாண்டிச்சேரியில் கைது செய்யப்படுகிறார். அவர் விசாரணை செய்யப்பட வேண்டிய இடத்தை ஆராய்க.



8. 'A', a witness, called before a Criminal Court refuses to answer questions which are put to him. He does not offer any reasonable excuse for such refusal. Can the court sentence him for such refusal?

'A' என்கிற ஓர் சாட்சி ஒரு குற்றவியல் நீதித்துறை நடுவர் முன் அழைக்கப்படுகிறார். அவர் தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்க மறுத்துவிடுகிறார். மறுப்பிற்கு நியாயமான எந்த விளக்கமும் அளிக்கவில்லை. நீதிமன்றம் அவரை தண்டிக்க இயலுமா?

9. Whether a father-in-law be ordered to pay maintenance to his daughter – in – law under Section 125 sub clause (1) of Criminal Procedure Code 1973?

குற்றவியல் நடைமுறை சட்டம் 1973 பிரிவு 125 துணைபிரிவு (1) -ன் கீழ் ஓர் மாமனார் அவருடைய மருமகளுக்கு வாழ்க்கை பொருள் உதவி அளிக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்க இயலுமா?

10. 'A' is a third party who is neither, the complainant nor the accused and has nothing to do with the case. Whether 'A' has the right to file a Petition to transfer the Case.

'A' என்ற மூன்றாம் நபர் முறையீட்டாளராகவோ, குற்றவாளியாகவோ மற்றும் எந்த விதத்திலும் வழக்கோடு சம்பந்தம் இன்றி இருக்கிறார். 'A' ஆகிய அவர் வழக்கினை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி மனு செய் உரிமையுள்ளவரா?

11. Whether persons accused of offence and persons accused of abetment or an attempt to commit the offence may be jointly tried and punished?

குற்றம் புரிந்த நபர்களையும், குற்ற உதவி செய்த நபரையும் அல்லது குற்றத்தை புரிய முயற்சித்த நபர்களையும் ஒரே விசாரணையில் உட்படுத்தி தண்டனை அளிக்க இயலுமா?

12. 'A' is accused of concealment of stolen property worth over fifty thousand rupees. Whether 'A' may be tried summarily for that offence and punished?

'A' என்பவர் ஐம்பது ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திருட்டு பொருட்களை மறைத்து வைக்க முயன்ற குற்றத்திற்காக குற்றம் சாட்டப்படுகிறார். அவரை சுருக்கு முறை விசாரணைக்கு உட்படுத்தி தண்டனை அளிக்க இயலுமா?

THE CENTRAL LAW COLLEGE, SALEM-636 008. LIBRARY

Register No. : [ ] [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

THE CENTRAL LAW COLLEGE SALEM LIBRARY

**FTA** 2801-15

(For the candidates admitted from 2009-10 onwards)

B.A., B.L. DEGREE EXAMINATION, MAY 2015.

(Five Years Regular Course)

Fifth Year — Ninth Semester

# CRIMINAL PROCEDURE CODE, JUVENILE JUSTICE ACT AND PROBATION OF OFFENDERS ACT

Time : Three hours Maximum : 100 marks

## PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following in not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்கவும்.

1. What are the special features of the Code of Criminal Procedure-1973?

   1973ம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை சட்டத்தின் சிறப்பான பண்புகள் யாவை?

2. How arrest can be made? What are the rights of the arrested person?

கைது நடவடிக்கை எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும்? கைது செய்யப்பட்டவரின் உரிமைகள் யாவை?

3. What is the primary object of framing charge? When charge may be framed?

குற்றச்சாட்டு வனைதலின் முதன்மையான நோக்கம் என்ன? குற்றச்சாட்டு எப்பொழுதெல்லாம் வனையப்படலாம்?

4. What are the conditions which must be satisfied before 'maintenance' can be granted?

வாழ்க்கை பொருளுதவி அளிக்கப்படுவதற்கு முன் கட்டாயமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய நிபந்தனைகள் யாவை?

5. Explain the origin, development and object of probation.

நன்னடத்தை விடுவிப்பின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதனின் நோக்கம் இவைகளை ஆராய்க.



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக :

(a) Arrest without warrant.

பிடியாணையின்றி கைது செய்தல்.

(b) Bailable and Non-Bailable offences

பிணையத்தில் விடக் கூடிய மற்றும் பிணையத்தில் விட இயலாத குற்றங்கள்.

(c) Conviction for different offence than charged

சாட்டப்பட்ட குற்றத்திலிருந்து மாறுபட்ட குற்றத்திற்கான தண்டனை.

(d) Double jeopardy.

இரட்டை இடர்.

(e) Examination of complainant.

குற்றமுறையீட்டாளரை விசாரணை செய்தல்.

(f) Final Report of Police.

காவலர் இறுதி அறிக்கை.

(g) Suspension of sentence.

தண்டனை நிறுத்தி வைப்பு.

(h) Observation home.

கண்காணிப்பு இல்லம்.

(i) Inferior courts.

கீழ்மை நீதிமன்றங்கள்.

(j) Juvenile Justice Act 2000.

இளவர் நீதி சட்டம் 2000.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்டப் பிரிவுகள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' - an accused in a murder case files a bail application before the High Court which has been rejected. Whether 'A' - can file a second application on same grounds before a Court of Sessions.

'A'-என்ற கொலை குற்றம் சாட்டப்பட்ட நபர். உயர்நீதிமன்றத்தின் முன்னால் பிணையத்தில் விடுவிக்க வேண்டி மனு செய்கிறார். அது நிராகரிக்கப்பட்டது. அவர் பிணையம் வேண்டி அதே காரணங்கள் அடிப்படையில் ஓர் இரண்டாவது மனுவை அமர்வு நீதிமன்றத்தில் முன்னால் தாக்கல் செய்ய இயலுமா?



8. A Chief Judicial Magistrate conducted a summary trial and imposed a punishment of three years for theft of property worth exceeding two thousand rupees. Is this order a legally sustainable one?

ஓர் முதன்மை குற்றவியல் நடுவர் ரூபாய் இரண்டாயிரத்திற்கு மேல் மதிப்புள்ள பொருளை திருடிய குற்றத்திற்காக சுருக்கு விசாரணை முறையில் விசாரணை நடத்தி மூன்று ஆண்டுகள் தண்டனை அளிக்கிறார். இந்த உத்தரவு சட்ட ரீதியாக நிலை நிறுத்தத்தக்கதா?

9. Some ornaments were stolen and recovered by the police. By a order of the magistrate it was kept with the Police. After conclusion of proceeding, application was made to return the property. Meanwhile it was stolen from the police custody. The application for return of property was rejected by the magistrate on the ground that the articles never reached the custody of the court. Whether the order is maintenable in law?

களவாடப்பட்ட நகைகள் காவல்துறை அதிகாரிகளால் கைப்பற்றபட்டு நீதிதுறை நடுவரின் ஆணைப்படி காவல்துறையிடம் ஒப்படைக்கப்படுகிறது. வழக்கு முடிந்தபின் நகைகளை கேட்டு மனு செய்யப்படுகிறது. இதனிடையில் காவல்துறையில் இருந்து நகை களவு போகிறது. நகைகள் நீதிமன்றத்தின் பொறுப்பில் கொண்டு வரப்படவே இல்லை என கூறி நீதித்துறை நடுவர் மனுவை தள்ளுபடி செய்கிறார். இந்த உத்தரவு சட்டரீதியாக செல்லுபடியாகக் கூடியதா?

10. "A" is wounded within the local limits of the jurisdiction of court of Chennai and dies within the local limits of the jurisdiction of court at Chengalpet. Where will the offence of culpable homicide of 'A' be inquired into and tried?

'A' என்ற நபர் சென்னை நீதிமன்ற எல்லையில் காயம் அடைந்து செங்கல்பட்டு நீதிமன்ற எல்லையில் இறந்து விடுகிறார். A-யின் மரணத்தை விளைவித்த குற்றத்தை எந்த நீதிமன்றத்தின் முன்னால் விசாரணை நடத்தி தண்டனை அளிக்கப்படலாம்?

11. An advocate was authorised by a public prosecutor who was appointed by the State Government to conduct a sessions trial before a Court of Sessions. Examine the validity of the trial.

மாநில அரசால் நியமனம் செய்யப்பட்ட ஓர் குற்றவியல் பொது வழக்கீட்டாளர் தனது சார்பாக வழக்கினை நடத்த ஒரு வழக்கறிஞரை அதிகார ஒப்படைவு செய்து அமர்வு நீதிமன்றத்தின் முன்னால் குற்ற வழக்கினை நடத்த செய்கிறார். இந்த குற்ற விசாரணை செல்லத்தக்கதா?

12. 'A' had committed an offence punishable only with fine, on 15.08.2013. This offence was taken cognizance by a judicial magistrate 01.04.2014. Decide whether the act of the magistrate is valid.

'A' என்பவர் அபராதம் மட்டுமே விதிக்க கூடியக் குற்றத்தினை 15.08.2013ல் செய்தார். அவர் செய்த குற்றத்தினை, 01.04.2014 அன்று குற்றவியல் துறை நீதிபதி கவனத்தில் எடுத்துக் கொண்டார். இது செல்லுபடியாகுமா?

---

THE CENTRAL LAW COLLEGE, SALEM-636 008. LIBRARY

Register No. | | | | | | | | |

**FTA** **2481–14**

(For the candidates admitted from 2009–10 onwards)

B.A., B.L DEGREE EXAMINATION, MAY 2014.

(Five Years Regular Course)

Fifth Year – Ninth Semester

# CRIMINAL PROCEDURE CODE, JUVENILE JUSTICE ACT AND PROBATION OF OFFENDERS ACT

Time : Three hours Maximum : 100 marks

## PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following in not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. “Every offence shall ordinarily be inquired into and tried by a court within the local limits of whose Jurisdiction it was committed”. Discuss the rule with its exceptions.

   “ஒவ்வொரு குற்றமும் சாதாரணமாக எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்பிற்குள் புரியப்படுகிறதோ அந்த நீதிமன்றத்தால் ஆராயப்படவும் விசாரணை செய்யப்படவும் வேண்டும்” - இந்த விதி மற்றும் இதன் விலக்குகள் ஆகியவற்றை கூர்ந்து ஆராய்க.

2. Under what circumstances search warrant can be issued by the criminal court? What is the procedure to be followed to execute such warrants?

குற்றவியல் நீதிமன்றத்தால் சோதனை ஆணை எப்போது வழங்கப்படலாம்? அத்தகைய ஆணைகளை நிறைவேற்ற கடைபிடிக்கப்படும் நடைமுறைகள் யாவை?

3. What are the powers of the high court and the sessions court in respect of transfer of cases? What principles are to be followed while exercising these powers?

வழக்குகளை மாற்றுவது குறித்து உயர்நீதிமன்றம் மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் அதிகாரங்கள் யாவை? இந்த அதிகாரங்களை பயன்படுத்துங்கால் எம்மாதிரியான நெறிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

4. What do you mean by 'Institutionalised reformation'? What are the various institutions involved in the reformation of a juvenile?

'நிறுவனம் சார்ந்த சீர்த்திருத்தம்' என்றால் என்ன? இளஞ்சிறார் சீர்திருத்தத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் யாவை?

5. Explain the procedure relating to appeal and the circumstances in which there is no appeal.

மேல்முறையீடு தொடர்பான நடைமுறைகளையும், எந்த சந்தர்ப்பங்களில் மேல்முறையீடு இல்லை என்பதனையும் விளக்கவும்



PART B — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக

(a) First Information Report.

முதல் தகவல் அறிக்கை

(b) Explain summons case.

அழைப்பாணை வழக்கு - விளக்குக.

(c) Borstal school.

சீர்திருத்த பள்ளி

(d) Tender of pardon to an accomplice.

உடன்குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்குதல்.

(e) Withdrawal from prosecution.

குற்ற வழக்குத் தொடர்பினை விலக்கிக் கொள்ளல்.

(f) Joinder of charges.

குற்றச்சாட்டுகளின் சேர்க்கை.

(g) Probation officer's report.

நன்நடத்தை அதிகாரியின் அறிக்கை

(h) Neglected juvenile.

கைவிடப்பட்ட இளஞ்சிறார்

(i) S. 437 Cr.P.C.

குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 437.

(j) Remand.

காவல்வைப்பு.

THE CENTRAL LAW COLLEGE, LIBRARY, SALEM-636 003.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' rescues 'B' a person in lawful custody and in doing so causes grievous hurt to 'C', a constable in whose custody 'B' was. 'A' is charged separately under S.225 and S.333 of IPC. Decide whether 'A' shall be tried in a single trial (or) in two different trials.

'அ' என்பவர் 'இ' என்னும் காவலர் பாதுகாப்பிலிருந்து 'ஆ' வை மீட்கிறார். 'இ' என்னும் காவலருக்கு 'அ' கொடுங் காயம் விளைவிக்கிறார். 'அ' என்பவர் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 225 மற்றும் பிரிவு 333 ஆகியவற்றில் குற்றம் சாட்டப்படுகிறார். அவர் இக்குற்றங்களுக்காக ஒரே வழக்கு விசாரணையில் விசாரிக்கப்பட வேண்டுமா அல்லது இருவேறு வழக்கு விசாரணையில் விசாரிக்கப்பட வேண்டுமா? என்பதை முடிவு செய்க.

8. A magistrate of first class finds an accused guilty of an offence and imposes a five of Rs. 75. The accused wishes to file an appeal. Advise him.

ஒரு குற்றவியல் நடுவர் குற்றம் சாட்டப்பட்ட ஒரு வரை குற்றவாளி என முடிவு செய்து அவருக்கு ரூ. 75 அபராதம் விதிக்கிறார். இதற்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டவர் மேல்முறையீடு செய்ய விரும்புகிறார். ஆலோசனை வழக்கவும்.



9. Nanthini files a case against her husband who had deserted her and her two children, claiming maintenance of Rs. 700 per month each. Will she succeed? Decide.

நந்தினி தன்னுடைய கணவர் தனது இரண்டு குழந்தைகளையும் மற்றும் தன்னையும் கைவிட்டுச் சென்று விட்டதாகக் கூறி அவரிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் 700 ரூபாய் வீதம் வாழ்க்கை பொருளுதவி கோரி வழக்கு தொடர்கிறார். அவர் வெற்றி பெறுவாரா? முடிவு செய்க.

10. 'A' was convicted by an additional sessions judge for four different offences in a single trial and he was sentenced to undergo rigorous imprisonment for 23 years. Decide the validity of the Judgment.

'அ' என்பவர் நான்கு வெவ்வேறு குற்றங்களுக்காக ஒரே வழக்கு விசாரணையில் விசாரிக்கப்பட்டு கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதியால் குற்றத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார் மற்றும் 23 வருட கடுங்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பு தண்டனை வழங்கப்படுகிறார். இந்த தீர்ப்பின் செல்லும் தன்மையை முடிவு செய்க.

11. 'A' after committing murder at Chennai absconded and afterwards he was arrested near Mysore. Discuss the place of trial.

'அ' என்பவர் சென்னையில் ஒரு கொலை செய்து விட்டு தலைமறைவாகிறார். பின்னர் மைசூர் அருகே கைது செய்யப்படுகிறார். அவர் விசாரணை செய்யப்பட வேண்டிய இடத்தை ஆராய்க.

12. In a complaint case under section 498A, 406 and 506 of the Indian Penal Code, the magistrate directed the police for registration of F.I.R. and investigation. Examine the legality of the order.

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 498A, 406 மற்றும் 506 ன் கீழ் குற்றம் செய்ததாக குற்ற முறையீடு செய்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்து புலன் விசாரணை செய்யுமாறு காவல் துறைக்கு குற்றவியல் நடுவர் ஆணையிட்டார். இந்த ஆணையின் சட்டப்படியான நிலையை ஆராய்க.

---

THE CENTRAL LAW COLL
LIBRARY
SALEM-

Register No. | | | | | | | | |

THE ... LAW ... LIBRARY

**FTA**

**2299–13**

(For the candidates admitted from 2009–10 onwards)

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2013.

(Five Years Regular Course)

Fifth Year — Ninth Semester

CRIMINAL PROCEDURE CODE, JUVENILE JUSTICE ACT AND PROBATION OF OFFENDERS ACT

Time : Three hours

Maximum : 100 marks

PART A — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following in not exceeding 6 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Explain the rule that any person can set the criminal law in motion and state its exceptions.

   எவரொருவராலும் குற்றச் சட்டத்தினை இயக்கலாம் என்ற விதியை விளக்கி அதன் விலக்குகளைக் கூறுக.

2. What are the circumstances under which a person may be ordered by a court to make monthly allowance for the maintenance of his wife and children?

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் ஒருவன் தன் மனைவி, மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைப் பொருளுதவிக்கு மாதாந்திர படித் தொகை வழங்குவதற்கு எந்த சூழ்நிலைகளில் நீதிமன்றம் ஆணையிடலாம்.

3. Explain the procedure to be followed by a police officer on receipt of information relating to the commission of a cognizable offence and non-cognizable offence.

பிடியாணையின்றி கைது செய்தற்குரிய குற்றம் மற்றும் பிடியாணையுடன் கைது செய்தற்குரிய குற்றம் ஒன்று புரிந்ததாக தகவல் பெற்றவுடன் ஒரு காவல் அலுவலர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை விளக்குக.

4. What are the formalities and precautions to be observed by a magistrate in recording the confession of an accused person?

குற்றம் சுமத்தப்பட்ட ஒருவரின் குற்ற ஏற்புரையை பதிவு செய்யும் பொழுது மாஜிஸ்திரேட் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் மற்றும் முன்னெச்சரிக்கைகள் யாவை?



5. What are the factors responsible for delinquency among children? Give your suggestions to control the problem.

இளஞ்சிறார் குற்றச்செயல் நிகழ்வுக்கு கூறப்படும் காரணிகள் யாவை? அதனை கட்டுப்படுத்துவதற்கு உமது ஆலோசனைகளை கூறவும்.

PART B — ($8 \times 6 = 48$ marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding 2 pages each :

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Anticipatory bail.

எதிர்நோக்குப் பிணை.

(b) Cognizable offence.

புலன் கொள் குற்றம்.

(c) Pre sentencing hearing.

தண்டனை தீர்ப்பு முன்னர் கேட்டல்.

(d) Inquest report.

இறப்பு ஆய்வறிக்கை.

(e) Remissionary sentence.

தண்டனையைக் குறைத்தல்.

(f) Case diary.

வழக்கு நாட்குறிப்பு.

THE CENTRAL LAW COLLEGE LIBRARY SALEM-636 008.

(g) Judicial custody.

நீதிமன்ற காவல்.

(h) Compoundable offences.

இசைந்து தீர்க்கக்கூடிய குற்றங்கள்.

(i) S.161(3) – Cr.P.C.

குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 161(3).

(j) Joint trial.

கூட்டு விசாரணை.

PART C — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கினுக்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The sessions court on conviction sentenced the accused for two months imprisonment. The convicted person wants to file an appeal. Decide.

இரண்டு மாதங்கள் சிறை தண்டனை விதித்து அமர்வு நீதிமன்றம் குற்றம் சாட்டபட்டவரைத் தண்டித்தது. தண்டிக்கப்பட்ட நபர் மேல் முறையீடு தொடர விரும்புகிறார். தீர்மானிக்கவும்.



8. The offence of robbery is committed within the jurisdiction of the court of Tirunelveli. The property involved is recovered at Madurai. Decide the place of court where this offence can be tried?

கொள்ளை குற்றம், திருநெல்வேலி நீதிமன்ற அதிகார வரப்பெல்லைக்குள் செய்யப்படுகின்றது. கொள்ளையில் சம்பந்தப்பட்ட பொருள் மதுரையில் மீட்கப்படுகின்றது. எந்த இடத்தில் உள்ள நீதிமன்றத்தில் இந்த குற்றத்தை விசாரிக்க முடியும் என்பதை முடிவு செய்க.

9. 'A' was sentenced by a High Court in an extra ordinary original jurisdiction to undergo six months of imprisonment. A wants to file an appeal before the Supreme Court. Advice him.

தனிப்பட்ட அசல் ஆள்வரையில் ஒரு உயர்நீதிமன்றம் 'அ' என்பவரை ஆறு மாத சிறை தண்டனை அனுபவிக்க தண்டனை தீர்ப்பு வழங்குகின்றது. அவர் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய விரும்புகிறார். ஆலோசனை வழங்கவும்.

10. The trial against 'A', an accused in a murder case, was conducted by producing him before the court by video conferencing. Decide the legality of this trial.

கொலை குற்றம் சுமத்தப்பட்ட 'அ' என்பவருக்கு எதிரான வழக்கில் வீடியோ கான்பரன்சிங் மூலம் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அவர் முன்னிலையில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின் சட்ட முறைமையை முடிவு செய்க.

11. 'A' was sentenced to life imprisonment for a murder and he is undergoing the imprisonment for the last 20 years. Now he filed a petition before the High Court stating that he is entitled to be released from prison. Decide.

ஒரு கொலை குற்றத்திற்காக ஆயுள் தண்டனை பெற்ற 'அ' என்பவர் கடந்த 20 வருடங்களாக சிறை தண்டனை அனுபவித்து வருகிறார். சிறையிலிருந்து விடுவிக்கப்பட உரிமைபடைத்தவர் என்று கூறி உயர் நீதிமன்றத்தில் ஓர் மனுவை தாக்கல் செய்கிறார். முடிவு செய்க.

12. During the life of the first Hindu wife 'A', her husband 'B' married another woman 'C'. 'A' gave an information to the police officer. The officer registered an F.I.R. Discuss the action taken by the police officer.

'அ' என்னும் ஓர் இந்து முதல் மனைவி உயிருடன் இருக்கும் போது அவளது கணவன் 'ஆ'. 'இ' என்னும் மற்றொரு பெண்ணை திருமணம் செய்கிறார். காவல்துறை அதிகாரியிடம் 'அ' தகவல் கொடுக்கிறார். காவல் துறை அதிகாரி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்கிறார். காவல் துறை அதிகாரியின் நடவடிக்கையை விவாதிக்கவும்.

THE CENTRAL LA
SALEM-6

---